00041

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்பு கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப் பரீட்சை – 2024

மட்டம் - 06

**SNU6223/ESU4123** – சிறுவர் உரிமைகள்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 02.03.2025 நேரம்: மு.ப 09.30 - பி.ப 12:30

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கும் பகுதி III இருந்து இரண்டு (02) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி I

1. இலங்கை சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க டச்சுக்காரர்கள் காலணித்துவ காலத்தில் எடுத்த ஐந்து (05) நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துக.

2. "உரிமையாளர் என்ற முறையில் ஒரு சிறுவரின் தனிப்பட்ட அடையாளம்" என்பது சிறுவர் உரிமைகளின் அடிப்படைக் கொள்கையாகும். இந்த எண்ணக்கருவை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

3. விசேட சூழ்நிலைகளில் சிறுவர்களின் "உயிர்வாழும் உரிமையை" பாதுகாக்க உதவும் **ஐந்து** (05) சமூக அடிப்படையிலான முயற்சிகளைக் குறிப்பிடுக.

4. "விசேட சூழ்நிலைகளில் சிறுவர்கள்" என்பதை வரையறுத்து, சமூகமயமாக்கலில் அவர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களைப் பட்டியலிடுக.

5. சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு பங்களிக்கும் **மூன்று** (03) காரணிகளைக் கண்டறிந்து, அவற்றில் **ஒன்றைப்** (01) பொருத்தமான எடுத்துக்காட்டுடன் சுருக்கமாக விளக்குக.

6. சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு குறித்த முக்கியமான தகவல்களைப் பகிரும் போது வழங்குநர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களை பட்டியலிடுக. மற்றும் அவற்றில் **ஒன்றை** (01) எடுத்துக்காட்டுடன் விளக்குக.

7. விசேட தேவைகள் உள்ள சிறுவர்களின் உரிமைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஊடகங்கள் பெற்றோருக்கு உதவக்கூடிய **ஐந்து** (05) வழிகளைக் குறிப்பிடுக.

8. விசேட தேவைகள் உள்ள தங்கள் சிறுவர்களில் படைப்பாற்றலை வளர்க்க பெற்றோர்கள் வீட்டில் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) உத்திகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** "பங்கேற்பு உரிமை" என்ற சொல்லை வரையறுக்க

**(03 புள்ளிகள்)**

**ii.** **"**விசேட தேவைகள் உள்ள சிறுவர்களுக்கு பற்கேற்பு உரிமை பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை" இந்தக் கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? அல்லது உடன்படவில்லையா? உங்கள் பதிலை நியாயப்படுத்த **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களை வழங்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகள் உள்ள சிறுவர்கள் பாடசாலையில் பங்கேற்கும் உரிமையை முழுமையாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய ஆசிரியர்கள் செயல்படுத்தக்கூடிய **ஐந்து** (05) நடவடிக்கைகளை விவரிக்குக.

**(10 புள்ளிகள்)**

10. **i.** "வளர்ச்சி மற்றும் விருத்தி" என்ற சொற்களின் அர்த்தம் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகள் உள்ள சிறுவர்களின் சமூக வளர்ச்சிக்குப் பொறுப்பான **மூன்று** (03) முக்கிய முகவர்களைக் குறிப்பிட்டு, உள்ளடங்கலை ஊக்குவிப்பதில் அவர்களின் பங்கை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகள் உள்ள சிறுவர்களை சமூகமயமாக்குவதில் மேற்கூறிய முகவர்களில் ஒருவர் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) சவால்களைக் குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

11. "சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வது குடும்பங்கள், பாடசாலைகள், சமூகங்கள் மற்றும் அரசாங்கங்களின் பகிரப்பட்ட பொறுப்பாகும்."

**i.** ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் மாநாட்டின் (UNCRC) வரையறையின்படி "பாதுகாப்பு உரிமை" என்ற எண்ணக்கருவை வரையறுக்க.

**(04 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்கான உரிமையை உறுதி செய்வதற்கு பாடசாலைகள் எவ்வாறு பாதுகாப்பான மற்றும் உள்ளடங்கிய சூழலை உருவாக்க முடியும் என்ற **மூன்று** (03) நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்க.

**(09 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகள் உள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கான உரிமையை சமூக மனப்பான்மைகள் மற்றும் களங்கங்கள் (Stigmas) எவ்வாறு பாதிக்கின்றன என்பதை மதிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**



96

12. **i.** "சிறுவரின் சிறந்த நலன்" என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள், மேலும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது ஏன் முக்கியம் என்பதை விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** தனது வகுப்பில் டவுன் சிண்ட்ரோம் உள்ள ஒரு சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளதாக ஆசிரியர்கள் சந்தேகிக்கும் போது அவர்கள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும். சிறுவர்களின் புத்திசாலித்தனத்தையும் நல்வாழ்வையும் உறுதி செய்ய ஆசிரியரால் எடுக்கக்கூடிய குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோகத்தைக் குறைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக ஊடகங்களால் பயன்படுத்தக்கூடிய நான்கு (04) வழிகளை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(03 புள்ளிகள்)**

13. **i.** சிறுவர்களின் உரிமைகள் குழுவின் **மூன்று** (03) பணிகளைப் பட்டியலிடுக.

**(07 புள்ளிகள்)**

**ii.** "இலங்கை சர்வதேச சிறுவர் உரிமைகள் ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது, ஆனால் அவற்றை முழுமையாக செயல்படுத்துவது இன்னும் ஒரு சவாலாக உள்ளது." இந்த கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? அல்லது உடன்படவில்லையா? உங்கள் பதிலை ஆதரிக்க காரணங்கள் மற்றும் எடுத்துக்காட்டுக்களை வழங்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** ஒரு தேசிய சிறுவர் உரிமைகள் கொள்கையை உருவாக்குவதற்கு நீங்கள் பொறுப்பு என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் முன்னுரிமை அளிக்கும் **மூன்று** (03) முக்கிய பகுதிகளை அடையாளம் கண்டு, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கு ஒவ்வொன்றும் ஏன் அவசியம் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

14. **i.** சிறுவர்களுக்கு அவர்களின் உரிமைகள் பற்றி கற்பிக்க **மூன்று** (03) பயனுள்ள முறைகளைப் பட்டியலிடுக. மற்றும் சிறுவர்களுக்கு அவர்களின் உரிமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த நீங்கள் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகள் உள்ள சிறுவர்களுக்கு உரிமையை ஆசிரியர்கள் எவ்வாறு உறுதி செய்யலாம்? **மூன்று** (03) பயனுள்ள உத்திகளுடன் விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகள் உள்ள சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதற்கான **மூன்று** (03) தடைகளை பட்டியலிடுக. மற்றும் அவற்றை சமாளிப்பதற்கான வழிகளை பரிந்துரைக்குக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -